## மரபீனி கத்தரிக்கு மாற்றாக அண்ணாமலை கத்தரி

நமது நிருபர்First Published : 15 Feb 2010 12:00:00 AM IST

Last Updated : 15 Feb 2010 04:26:11 PM IST



**சிதம்பரத்தை அடுத்த சி.முட்லூர் கிராமத்தில் விவசாயி பானுசந்தர் தோட்டத்தில் மகசூல் செய்யப்பட்ட அண்ணாமலைகத்தரி.**

சிதம்பரம், பிப்.14: மரபீனி கத்தரிக்கு இந்தியா முழுவதும் பலத்த எதிர்ப்பு கிளம்பியதால் மரபீனி கத்தரியை இந்திய சந்தையில் அறிமுகம் செய்து விவசாயிகளின் தோட்டங்களில் சாகுபடி செய்ய மத்திய அரசு தடை விதித்துள்ளது.

இந்நிலையில் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண்துறை உருவாக்கியுள்ள அதிக மகசூல் தரும் அண்ணாமலை கத்தரி, மரபீனி கத்தரிக்கு நல்ல மாற்றாக இருக்கும் என அண்ணாமலைப் பல்கலை. விரிவாக்கத்துறை விரிவுரையாளர் தி.ராஜ்பிரவீன் தெரிவித்துள்ளார்.

பாரம்பரிய மற்றும் இயற்கை சார்ந்த வேளாண்மை தொழில்நுட்பங்கள் கொண்டு அதிக உற்பத்தி, உற்பத்தித் திறன் மற்றும் அதிக மகசூல் கொண்டு உருவாக்கப்பட்ட அண்ணாமலை கத்தரி, மரபீனி கத்தரிக்கு நல்ல மாற்றாக இருக்கும் என ராஜ்பிரவீன் தெரிவிக்கிறார்.

அண்ணாமலைப் பல்கலை. வேளாண்துறையில் 1968-69-ம் ஆண்டு வேளாண்துறை மாணவர் செல்லையாவால், சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத வகையிலும், கால்நடைகள் மற்றும் மனித உயிருக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் உயர் விளைச்சல் தரும் ரகமாக உருவாக்கப்பட்டது அண்ணாமலை கத்தரி.

அதிக மகசூல் தரும் இந்த கத்தரி பெரிதாகவும், ருசியாகவும் இருக்கும். தற்போது சிதம்பரம் தாலுக்காவில் அண்ணாமலைப் பல்கலை. கிராமப்புற வேளாண் விரிவாக்கத் திட்டத்தின் கீழ் விரிவுரையாளர் தி.ராஜ்பிரவீன் தலைமையில் வேளாண் மாணவர்கள் மூலம் அண்ணாமலை கத்தரி குறித்து விழிப்புணர்வு பிரசாரம் செய்யப்பட்டு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.அண்ணாமலை கத்தரி விதைகளை தொடர் விரிவாக்கத்துறை வாயிலாக பெற்று அண்ணாமலை கத்தரி சாகுபடி செய்து அதிக மகசூல் மற்றும் அதிக லாபம் பெற்று வருகின்றனர் விவசாயிகள்.

சிறப்புகள்: அண்ணாமலை கத்தரி பன்னெடுங்காலமாக விவசாயிகளின் தோட்டங்களில், வீடுகளில் தொடர்ந்து சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

குறிப்பாக பெண்களால் வீடுகளில் அமைக்கப்பட்டு சாகுபடி செய்யப்படுகிறது. வீட்டு காய்கறித் தோட்டங்களில் முக்கிய காய்கறிப் பயிராக தொடர்ந்து சாகுபடி செய்யப்படுகிறது.

சுமார் 180 நாள்கள் வரை நல்ல மகசூல் தரும் அண்ணாமலை கத்தரி. குறிப்பாக கத்தரி சாகுபடியில் அதிக பாதிப்பை ஏற்படுத்தும் அசுவினிக்கு எதிராக வளரும் ரகமாக உருவாக்கப்பட்ட அண்ணாமலை கத்தரி, அசுவின்கான தேசிய சோதனை ரகமாகும். உயர் வேளாண் ஆராய்ச்சி அமைப்புகளால் தேர்வு செய்யப்பட்ட சிறப்பையும் பெற்றுள்ளது. இதைத் தொடர்ந்து பாதுகாத்து அடுத்த பருவத்துக்கும் மறுதாம்புப் பயிராக சாகுபடி செய்ய முடியும். குறைந்த வேளாண் முதலீட்டில் அதிகளவு லாபம் பெற முடியும்.

விவசாயி சீனுவாசப் பெருமாள் (சி.முட்லூர்): அண்ணாமலை கத்தரி சிதம்பரத்தை அடுத்த சி.முட்லூர் பகுதியில் தொடர் விரிவாக்கப் பணிகள் வாயிலாக ஏற்பட்ட விழிப்புணர்ச்சியால் சிறு மற்றும் குறு விவசாயிகள் அதிகளவில் சாகுபடி செய்து லாபம் பெற்று வருகின்றனர்.

தற்போது சிதம்பரம் புறவழிச் சாலை பணி முடிவுற்றால் அண்ணாமலை கத்தரியை கடலூர், புதுச்சேரி, திண்டிவனம் சந்தைகளில் விற்பனை செய்வதன் வாயிலாக மேலும் அதிக லாபம் பெற முடியும்.அகல ரயில் பாதையில் ரயில்கள் இயக்கப்பட்டால் சென்னை, கோவை, மதுரை போன்ற பெருநகரங்களையும் அதிகளவு விற்பனை வாய்ப்புகள் கிடைக்கும். மேலும் சி.முட்லூர் பகுதி விவசாயிகள் புதிதாக சமுதாய விவசாய விதைப் பண்ணை அமைத்து பாரம்பரிய விதைகளை பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளோம் என்றார்.உழவர் மன்ற கூட்டமைப்புத் தலைவர் பெ.ரவீந்திரன்: தற்போது சி.முட்லூர் பகுதியில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள கிளேடிஓலஸ் வண்ணமலர், அண்ணாமலை கத்தரி உள்ளிட்ட பிற காய், கனிகளை நல்ல முறையில் குளிர்பதன அறைகள் மூலம் பாதுகாத்து பல நாள்களுக்கு கெடாமல் வைத்திருந்து விற்பனை செய்ய மத்திய, மாநில அரசு மானிய உதவியுடன் விரைவில் புதிய திட்டத்தை தொடங்க உள்ளோம்.புதிய இயற்கை வேளாண் தொழில்நுட்பங்கள் வாயிலாக அதிக மகசூல் செய்து வாழ்வில் வளம் பெற விவசாயிகள் சங்கம் இணைந்து செயல்படும் என பி.ரவீந்திரன் தெரிவித்தார்.

**வரிச் சலுகைகள் தொடர வேண்டும்: ஏற்றுமதியாளர்கள் வலியுறுத்தல்**

First Published : 16 Feb 2010 12:00:00 AM IST

புது தில்லி, பிப்.15: மத்திய அரசு தொழில் நிறுவனங்களுக்கு அளித்துவரும் வரிச் சலுகையை மேலும் ஓராண்டுக்குத் தொடர வேண்டும் என்று ஏற்றுமதியாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

÷சர்வதேச தேக்க நிலையிலிருந்து மீள்வதற்காக மத்திய அரசு வரிச் சலுகையை அறிவித்தது. இதனால் அரசுக்கு வரி வருவாய் கணிசமாகக் குறைந்தது. இந்நிலையில் நிதிப் பற்றாக்குறையைச் சமாளிக்க வேண்டிய கட்டாயமும் அரசுக்கு ஏற்பட்டது.

÷டிசம்பர் மாதத்தில் தொழில்துறை உற்பத்தி முன்னெப்போதைக் காட்டிலும் மிக அதிக அளவாக 16 சதவீத வளர்ச்சியை எட்டியுள்ளது. இதனால் இம்மாதம் தாக்கல் செய்ய உள்ள மத்திய பட்ஜெட்டில் வரிச் சலுகைகள் படிப்படியாகத் திரும்பப் பெறுவதற்கான அறிவிப்பை வெளியிட வேண்டும் என்று பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழுவின் தலைவர் சி. ரங்கராஜன் மற்றும் திட்டக் குழு துணைத் தலைவர் மான்டேக் சிங் அலுவாலியா ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர்.

÷இந்நிலையில் வரிச் சலுகை தொடர வேண்டும் என்று தொழில்துறையினர் கருத்து தெரிவித்தனர். தற்போது ஏற்றுமதியாளர்களும் இதே கோரிக்கையை வலியுறுத்தியுள்ளனர்.

÷சர்வதேச தேக்க நிலை காரணமாக கடந்த 13 மாதங்களாக இந்திய ஏற்றுமதி தொடர்ந்து சரிவைச் சந்தித்து வந்தது. இந்நிலை கடந்த நவம்பரிலிருந்து சற்று மேம்பட்டுள்ளது.

÷கடந்த மூன்று மாதங்களாக ஏற்றுமதி அதிகரித்ததற்கு அரசு அளித்த சலுகைகளே காரணம். இந்நிலையில் சலுகைகளைத் திரும்பப் பெற்றால் அது ஏற்றுமதித் தொழிலைக் கடுமையாகப் பாதிக்கும் என்று இந்திய ஏற்றுமதி மேம்பாட்டு அமைப்பின் (எப்ஐஇஓ) தலைவர் ஏ. சக்திவேல் தெரிவித்துள்ளார்.

÷புகையிலை, கையால் நெய்யப்பட்ட பருத்தி இழை, தேயிலை, காபி ஆகியவற்றின் ஏற்றுமதி அதிகரித்ததற்கு அரசு அளித்த சலுகையே காரணம். ஏற்றுமதிசார்ந்த தொழிலுக்கு ஓராண்டு முதல் ஒன்றரை ஆண்டு வரை சலுகை நீடிக்க வேண்டும். வரிச் சலுகையைத் திரும்பப் பெற்றால் இத்துறை பெரும் சரிவைச் சந்திக்கும் என்று அவர் கூறினார். ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு ஏற்கெனவே அளிக்கப்படும் வரிச் சலுகையை விட கூடுதலாக 2 சதவீதம் அளிக்கப்படும் என அரசு அறிவித்தது. இந்த வகையிலான சலுகையை 19 பொருள்கள் பெற்று வந்தன.

ஏற்றுமதியை அதிகரிக்க உத்தி: இதனிடையே ஏற்றுமதியை அதிகரிப்பது தொடர்பான உத்திகள் அடங்கிய ஆலோசனை கட்டுரையை மத்திய வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மா வெளியிட்டார். இன்ஜினீயரிங் ஏற்றுமதி மேம்பாட்டுக் கவுன்சில் (இஇபிசி) இந்தக் கட்டுரையைத் தயாரித்துள்ளது. இன்ஜினீயரிங் தயாரிப்புகளின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் இதில் உள்ளன. அடுத்த ஐந்து ஆண்டுகளில் இத்துறையின் ஏற்றுமதியை அதிகரிக்க அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் இதில் உள்ளதாக இஇபிசி தலைவர் அமன் சத்தா தெரிவித்தார்.

### விவசாயிகள் பயிற்சி முகாம்

First Published : 15 Feb 2010 01:23:46 AM IST

பொள்ளாச்சி, பிப்.14: பொள்ளாச்சி தெற்கு வட்டாரத்தில் வேளாண்மைத் துறை சார்பில் நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ் விவசாயிகள் பயிற்சி முகாம் கடந்த வியாழக்கிழமை கஞ்சம்பட்டியில் நடந்தது.

வேளாண்மைத் துறை, தோட்டக் கலைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, வேளாண் பொறியியல் துறை, பொதுப் பணித் துறை ஆகிய துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் பங்கேற்றனர்.

பொள்ளாச்சி தெற்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மு.வே. மோகனசுந்தரம் முகாமைத் துவக்கி வைத்து நீர் வள, நில வளத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களான நிலக்கடலை மற்றும் பயிறு வகை செயல் விளக்கத் திடல்கள் அமைப்பது குறித்தும், அதன் தொழில் நுட்பங்கள் குறித்தும் விளக்கினார்.

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து உதவி இயக்குநர் நாகராஜ் விளக்கினார்.

வேளாண் பொறியியல் துறை சார்பில் உதவிப் பொறியாளர் நாகேஷ் விளக்கமளித்தார்.

பொதுப் பணித் துறை உதவிப் பொறியாளர் சம்பத், தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் சாந்தி ஆகியோர் பேசினர்.

வானிலை சார்ந்த காப்பீட்டுத் திட்டம் குறித்து இப்கோ நிறுவனத்தின் கண்ணன் விளக்கினார். கோலார்பட்டி ஊராட்சித் தலைவர் கே.பி.ராமசாமி உள்ளிட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர். துணை வேளாண்மை அலுவலர் வி.பி.அசோகன் நன்றி கூறினார்.

### பெரிய ஏரிக்கு கால்வாய் அமைக்க விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்

First Published : 15 Feb 2010 01:18:36 AM IST

கிருஷ்ணகிரி,பிப். 14: ஆந்திர மாநிலத்தில் உற்பத்தியாகி கிருஷ்ணகிரி மாவட்டத்தின் வழியாகச் செல்லும் மார்கேண்டையன் நதிநீரை, நாரலப்பள்ளி ஏரி வழியாக பெரிய ஏரியை இணைக்க விவசாய கால்வாய் அமைக்க வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

சங்கத்தின் கிருஷ்ணகிரி ஒன்றிய ஆலோசனைக் கூட்டம் பெரியகோட்டப்பள்ளியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.பயிர்களை அழிக்கும் காட்டுப் பன்றிகளைக் கட்டுப்படுத்த வேண்டும். போத்திநாயனப்பள்ளிக்கும் பெரியகோட்டப்பள்ளிக்கும் இடையே செல்லும் ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்துக்கு ஒன்றியத் தலைவர் ஜி.சிவராஜி தலைமை வகித்தார். மாநில நிர்வாகக் குழு உறுப்பினர்கள் எம்.லகுமைய்யா, பி.எஸ்.மாசிலாமணி, மாவட்டத் தலைவர் ஜெ.சீனிவாசன், மாவட்டச் செயலர் எஸ்.கண்ணு உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

நிர்வாகிகள் தேர்வு

தொடர்ந்து, சங்கத்தின் ஒன்றியத் தலைவராக சிவராஜி, செயலராக கோவிந்தராஜ், பொருளராக பெருமாள், துணைத் தலைவராக எல்.கே.கோவிந்தராஜ், துணைச் செயலராக சிவநாதன் உள்ளிட்டோர் தேர்வு செய்யப்பட்டனர்.

### பிப்.19-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

First Published : 16 Feb 2010 04:56:34 AM IST

திருவண்ணாமலை, பிப். 15:திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் பிப். 19-ம் தேதி காலை 11 மணிக்கு நடைபெறுகிறது. மாவட்ட ஆட்சியர் மு.ராஜேந்திரன் தலைமை தாங்குகிறார்.

கூட்டத்தில் விவசாயிகள் பங்கேற்று தங்கள் கருத்துக்களையும், குறைகளையும் தெரிவித்து பயன்பெறலாம் என மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### 10 சதவீத பொருளாதார வளர்ச்சி இருந்தால்தான் வேலையின்மை குறையும்: பிரதமர்

First Published : 16 Feb 2010 04:58:59 AM IST

Last Updated : 16 Feb 2010 05:30:36 AM IST

புது தில்லி, பிப். 15: ஒன்பது முதல் 10 சதவீத பொருளாதார வளர்ச்சி இருந்தால்தான் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் குறையும் என்று பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

இந்த பொருளாதார வளர்ச்சியை எட்ட தொழில்துறையை மேலும் வலுப்படுத்தி வளர்ச்சியடையச் செய்ய வேண்டுமென்று அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

சிறந்த உருக்கு ஆலைகளுக்கு பரிசு வழங்கும் விழா தில்லியில் திங்கள்கிழமை நடைபெற்றது. இதில் விசாகப்பட்டினம் மற்றும் பிலாய் உருக்கு ஆலைகளுக்கு பிரதமர் சுழற்கோப்பையை வழங்கி மன்மோகன் சிங் பேசியதன் சுருக்கம்:

பொருளாதார வளர்ச்சி 9 முதல் 10 சதவீதம் வரை இருந்தால் தான் நாடு வேகமாக வளர்ச்சி அடைய முடியும். வேலையின்மை பிரச்னை தீரும். இதற்கு தொழிற்துறையினரின் பங்களிப்பு மிகவும் அவசியம்.

உலக அளவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக 2008-09-ம் ஆண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 9 சதவீதத்திலிருந்து 6.7 சதவீதமாகக் குறைந்தது. நடப்பு நிதியாண்டில் அந்த நிலையிலிருந்து மீண்டு 7.2 சதவீதம் என்ற நிலையை எட்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது என்றார் மன்மோகன் சிங்.

தினமலர்

**விவசாயிகளை பாதுகாக்க புது திட்டம்**

பிப்ரவரி 16,2010,00:00



விருதுநகர் :விவசாயிகளை நஷ்டத்திலிருந்து பாதுகாக்க அரசு புதிய திட்டத்தை செயல்படுத்த உள்ளது. மாவட்டம் தோறும் விவசாயிகளுக்கு, விவசாயம் சார்ந்த அனைத்து சட்டப்பாதுகாப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த பயிற்சி அளிக்கப்படுகிறது. விவசாயிகள் விதைகள், இடுபொருள்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள், உரங்கள் வாங்கும் போது அதற்கான பில்லும், சம்பந்தப்பட்ட பொருளின் ரகம், காலாவதியான பொருளா? முளைப்பு திறன் ஆகியவற்றை சோதனை செய்து வாங்க வேண்டும். இதன்பின், அந்த பொருளை பயன்படுத்தியதில் நஷ்டம் ஏற்பட்டால் நுகர்வோர் குறைதீர் மன்றத் தில் எப்படி புகார் செய்ய வேண்டும். பாதிப்புக்கு வழங்கப்படும் தீர்ப்புகள் ஆகியவை குறித்தும்.விளக்கமளிக்கப்படுகிறது.மாவட்டங்களில், விவசாய இணை இயக்குனர், உழவர் பயிற்சி மைய துணைஇயக்குனர், நுகர்வோர் அமைப்பின் மாநில தலைவர் உட்பட அதிகாரிகள் பிப்., 18, 25 ஆகிய தேதிகளில் பயிற்சி அளிக்கின்றனர். பயிற்சி பெற்ற விவசாயிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது.

**தவிட்டில் இருந்து எரிவாயு: மாற்றுத்திறனுடைய மாணவர் கண்டுபிடிப்பு**

பிப்ரவரி 15,2010,23:58 IST



சிதம்பரம் : தவிட்டில் இருந்து எரிவாயு எடுக்கும் முறையை சிதம்பரம் இன்ஜினியரிங் கல்லூரியில் படிக்கும் மாற்றுத்திறனுடைய மாணவர் கண்டுபிடித் துள்ளார். கடலூர் மாவட்டம், நெய்வேலி பிளாக் 84, முருகன்கோவில் தெருவை சேர்ந்தவர் நாகராஜன். ஊனமுற்ற இவர் அண்ணாமலை பல்கலைக்கழக இன்ஜினியரிங் கல்லூரியில் எம்.எஸ்.சி., சாப்ட்வேர் இன்ஜினியரிங் இறுதியாண்டு படித்து வருகிறார். தற்போது, சிதம்பரத்தில் உறவினர் வீட்டில் தங்கி படித்துவரும் நாகராஜன், சிதம்பரம் பகுதியில் அதிக அளவில் கிடைக்கும் தவிட் டில் இருந்து எரிவாயு கண்டுபிடிக்க முடியுமா என சோதனையில் இறங்கினார். அதன் பலனாக எரிவாயு கண்டுபிடித்து வெற்றி கண்டுள்ளார். இரண்டு பக்கம் அடைக்கப் பட்ட தகர டப்பாவில் தவிடு போட்டு மூடி, அதை சூடு படுத்தியவுடன், டப்பாவில் ஒரு பக்கத்தில் அமைத்துள்ள சிறிய குழாய் வழியாக காஸ் வெளியேறியது. அதை தீக்குச்சியால் கொளுத்தியபோது நீலக்கலரில் எரிந்தது. இந்த எரிவாயுவை சிலிண்டரில் அடை த்து அடுப்பெரிக்க பயன்படுத்த முடியும் என்றும் நாகராஜன் தெரிவித்தார்.

**மாவு பூச்சியை அழிக்க ரூ.67 லட்சத்தில் திட்டம் : அன்னூரில் வேளாண் துறை பணி துவக்கம்**

அன்னூர், : அன்னூர், அவிநாசி வட்டாரத்தில் 3000ம் ஏக்கரில் மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த ரூ. 67 லட்சத்தில் மருந்து தெளிப்பு பணி நேற்று துவங்கியது. அன்னூர் வட்டாரத்தில் பல ஆயிரம் ஏக்கர் பயிர்களில் கள்ளிப்பூச்சியால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இலைகள் சுருண்டு, விளைச்சல் பாதியாக குறைந்து விட்டது. வேளாண் துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் பட்டுவளர்ப்பு துறை இணைந்து ஒருங்கிணைந்த மருந்து தெளிப்பு பணியை நேற்று அல்லப்பாளையத்தில் துவக்கின. கோவை வேளாண் இணை இயக்குனர் கந்தசாமி துவக்கி வைத்து பேசியதாவது: இத்திட்டத்தில் கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம், நாமக்கல் ஆகிய மாவட்டங்களுக்கு அரசு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. கோவை மாவட்டத்தில் அன்னூர், திருப்பூர் மாவட்டத்தில் அவிநாசி ஆகியவற்றுக்கு 67 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் அதிகபட்சமாக அன்னூர் வட்டாரத்தில்தான் 7,600 ஏக்கர் பரப்பில் பயிர் பாதிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக அசாடிராக்டின் தண்ணீரில் கலந்து ரோட்டோரம், குளம், குட்டை மற்றும் தோட்டங்களில் உள்ள செடிகள், பயிர்களுக்கு தெளிக்கப்படுகிறது. 15 நாட்களுக்கு பின் புரொபனோபாஸ் மருந்து தெளிக்கப்பட உள்ளது. இதனால் மாவுப்பூச்சி நூறு சதவீதம் கட்டுப்படும் என்ற நம்பிக்கை உள்ளது.

விவசாயிகள் சொட்டு நீர் பாசனம் அமைப்பதால் ஐம்பது சதவீத நீரை சேமிக்கலாம். 65 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. பயறு பெருக்கத்திட்டத்தில் டிஏபி உரம் மானிய விலையில் வழங்கப்படுகிறது. எண்ணை வித்து பயிரிடும் விவசாயிகளுக்கு ஜிப்சம் 50 சதவீத மானியத்தில் வழங்குகிறோம். விசை தெளிப்பானுக்கு 2,000 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. இவ்வாறு கந்தசாமி பேசினார். துவக்க நிகழ்ச்சியில், வேளாண் உதவி இயக்குனர் விஜயகுமார், தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் பிரேம்குமார், ஊராட்சி ஒன்றிய தலைவர் ராதா, ஊராட்சி தலைவர் கண்ணன் உள்பட பலர் பங்கேற்றனர். விசை தெளிப்பான் மூலம் 11 பேர் மருந்து தெளிக்கும் பணியில் ஈடுபட்டனர். ஒரே நாளில் நூறு ஏக்கருக்கும் அதிகமான பரப்பில் தெளிக்கப்பட்டது.

ஓரைக்கால்பாளையத்தில் தானியங்களை உலர வைக்க உலர் களன் அமைத்து தர வேண்டும் என்று பண்ணை மகளிர் குழுவினர் மனு கொடுத்தனர். விவசாயிகளுக்கு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். "மாவுப்பூச்சி தாக்குதலால் பட்டுப்புழு வளர்ப்பு நலிந்து வருகிறது' என விவசாயிகள் அதிகாரிகளிடம் கூறினர்.

**கொள்முதலுக்கு வியாபாரிகள் வராததால் மறியல் : போலீஸ் - விவசாயி தள்ளுமுள்ளால் பரபரப்பு**

விருத்தாசலம் : விருத்தாசலம் ஒழுங்குமுறை விற்பனை கூடத் தில் கொள்முதல் செய்ய வியாபாரிகள் வராததால் ஆத்திரமடைந்த விவசாயிகள் சாலை மறியலில் ஈடுபட்டனர். அவர்களை போலீசார் அப்புறப்படுத்த முயன்றதால் பரபரப்பு நிலவியது. விருத்தாசலம் ஒழுங்குமுறை விற்பனை கூடத் தில் இடநெருக்கடி, சாக்குகள் பற்றாக்குறை, ஜெனரேட்டர் வசதியின்மை உள் ளிட்ட கோரிக்கைகளை நிவர்த்தி செய்யக் கோரி விற்பனைக் கூட வியாபாரிகள் சங்கத்தினர் தாசில்தார் மற்றும் கடலூர் விற் பனை குழு செயலாளருக்கு கடந்த வாரம் கோரிக்கை மனு அனுப்பினர்.

அதில் கோரிக்கைகளை நிறைவேற்றாவிட் டால் 15ம் தேதி முதல் கொள்முதல் செய்வதில்லை என தெரிவிக்கப் பட்டிருந்தது. அதன்படி கோரிக்கைகளை அதிகாரிகள் நிறைவேற்றவில்லை. இதனால் வியாபாரிகள் நேற்று கொள்முதல் செய்யவரவில்லை. இதனால் நேற்று முன்தினம் இரவு முதல் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விளைபொருட்களை விற்க காத்திருந்த நூற்றுக்கணக்கான விவசாயிகள் ஆத்திரமடைந்து காலை 9.10 மணியளவில் விருத்தாசலம் - கடலூர் சாலையில் மறியலில் ஈடுபட்டனர்.

அவர்களை போலீசார் அப்புறப்படுத்த முயன்றதால் இரு தரப்பிற்கும் இடையே தள்ளு முள்ளு ஏற்பட்டது. பின்னர் அங்கு வந்த மண்டல தாசில்தார் பழனி, சப் இன்ஸ்பெக்டர் கண்மணிசுப்பு உள்ளிட்டோர் மறியலில் ஈடுபட்ட விவசாயிகளிடம், அதிகாரிகளிடம் குறைகளை கூறுங்கள் என சமாதானம் செய்து சாலையில் இருந்து அப்புறப்படுத்தினர். பின்னர் ஒழுங்குமுறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) ஆறுமுகம் விவசாயிகளை விற்பனைக் கூட வளாகத்திற்கு அழைத்து சென்று பேச்சுவார்த்தை நடத்தினார். விவசாயிகளின் மறியல் போராட்டத்தால் 50 நிமிடம் போக்குவரத்து பாதித்தது.

**புகையிலை அறுவடை தீவிரம்: விலை ஏற்றத்தால் விவசாயிகள் 'குஷி'**

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் பகுதியில் புகையிலை அறுவடை தீவிரமாக நடக்கிறது. கடந்த காலத்தை விட தற்போது விலை அதிகரித்துள்ளதாலும், விளைச்சல் நல்லபடியாக இருப்பதாலும் புகையிலை விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.சத்தியமங்கலம், டி.ஜி., புதூர், சதுமுகை, ஆலாம்பாளையம் மற்றும் பவானிசாகர் பகுதியில் 25 ஆயிரம் ஏக்கருக்கு மேல் புகையிலை பயிரிட்டுள்ளனர்.

கடந்த ஆண்டை விட நடப்பாண்டில் புகையிலை பயிரிட்டுள்ளது அதிகரிக்கப்பட்டுள்ளது. பொதுவாக புகையிலை நாற்று விதைத்த நாளில் இருந்து 40 நாளில் அதை பிடுங்கி ஏக்கர் ஒன்றுக்கு 7, 500 நாற்றுக்கள் என்ற எண்ணிக்கையில் நடவு செய்ய வேண்டும். நடவு செய்யப்பட்ட 80 நாளில் இருந்து 90 நாளுக்குள் புகையிலை செடியில் வரும் கொழுந்தை கிள்ளி விட வேண்டும். பத்து நாட்களுக்கு ஒரு முறை என்ற கணக்கில் நான்கு முறை புகையிலை செடியின் கொழுந்தை கிள்ள வேண்டும். நடவு செய்யப்பட்ட நாளில் இருந்து 120 முதல் 130 நாட்களில் புகையிலை அறுவடைக்கு தயாராகி விடுகிறது.

அதன்பின் வயல்காட்டில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட புகையிலை செடியை பந்தல் அமைத்து அதில் சூரிய வெப்பம் படும்படி காய வைக்கின்றனர். 25 நாள் காய வைத்த பிறகு காய்ந்த புகையிலை செடிகளை ஒன்றின்மேல் ஒன்று அடுக்கி

அதை பதப்படுத்துகின்றனர். முப்பது நாட்கள் பதப்படுத்தியபிறகு விற்பனைக்கு தயாராகி விடுகிறது. நடப்பாண்டில் புகையிலை நன்றாக மகசூல் கிடைத்துள்ளதாக புகையிலை விவசாயிகள் கூறுகின்றனர்.

கடந்தாண்டு ஒரு ஏக்கருக்கு 950 கிலோ கிடைத்த புகையிலை தற்போது ஏக்கர் ஒன்றுக்கு 1,100 முதல் 1,300 கிலோ வரை மகசூல் கிடைத்துள்ளதாக கூறுகின்றனர். கடந்த ஆண்டு கிலோ ஒன்று ரூ. 40க்கு விற்பனையான புகையிலை தற்போது கிலோ ஒன்று ரூ. 60க்கு விற்பனையாகிறது. மேலும் புகையிலை விலை அதிகரிக்கலாம் என்று வியாபாரிகள் கருத்து தெரிவிப்பதால் புகையிலை விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

### நெற்பயிர் ஆய்வு

மேலூர் : மேலூர் பகுதியில் சம்பா நெல் பயிர் நிலவரம் குறித்து வேளாண்மை இணை இயக்குனர் சங்கரலிங்கம் தலைமையில் ஆய்வு செய்யப்பட்டது. வேளாண்மை உதவி இயக்குனர் கணேசன், வேளாண் அலுவலர்கள் ஜெயகிருஷ்ணன், கமலாலட்சுமி, துணை வேளாண் அலுவலர் அசோகன் கொண்ட குழு, திருவாதவூர், வெள்ளலூர் மற்றும் கீழவளவு பிர்க்காவை சேர்ந்த பல்வேறு கிராமங்களில் ஆய்வு மேற் கொள்ளப்பட்டது.

### மாவுப்பூச்சி மருந்து தெளிப்பு முகாம்

நாமக்கல்: தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், ஒட்டு மொத்த மாவுப்பூச்சி மருந்து தெளிப்பு முகாம், நாமக்கல் அடுத்த சிவியாம்பாளையத்தில் நடந்தது. பஞ்சாயத்து தலைவர் கணேசன் தலைமை வகித்தார். வட்டார வேளாண் உதவி இயக்குனர் குணசேகரன் வரவேற்றார். யூனியன் சேர்மன் ராணி முகாமை துவக்கி வைத்தார். பப்பாளி, மரவள்ளி மற்றும் காய்கறி பயிர்களில் மாவுப்பூச்சி தாக்குதல் 10 ஏக்கர் பரப்பில் ஏற்பட்டுள்ளது. அவற்றை கட்டுப்படுத்தும் நோக்கில் முதல் கட்டமாக அசாடிராக்டின் ஒரு சதவீதம் மருந்தை தமிழக அரசால் இலவசமாக தெளிப்பு செய்ய அறிவுறுத்தப்பட்டது. ஒட்டு மொத்த மருந்து தெளிப்பு முகாமில், மரவள்ளி, பப்பாளியில் மாவுப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த கைதெளிப்பான் மூலம் மருந்து தெளிக்கப்பட்டது.

சந்தியூர் வேளாண் அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் கீதா, மாவுப்பூச்சி தாக்குதலின் அறிகுறிகள், அதை தடுக்கும் வழிமுறைகள், வயலில் மருந்து தெளிக்கும் முறை குறித்து விளக்கினார். நிகழ்ச்சியில், கலெக்டரின் நேர்முக உதவியாளர் ராஜா, வேளாண் துணை இயக்குனர் பிரபாகரன், வேளாண் உதவி இயக்குனர் துரைசாமி, வட்டார வேளாண் அலுவலர் விஜயா, உதவி அலுவலர்கள், முன்னோடி விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர். ஒட்டு மொத்த ஏற்பாடு, வயல் மற்றும் விவசாயிகள் தேர்வு பணிகளை உதவி விதை அலுவலர்கள் சேகர், சாந்தி, உதவி வேளாண் அலுவலர்கள் செந்தில்வேலன், கண்ணன் ஆகியோர் செய்திருந்தனர்.

### வேளாண் அறிவியல் நிலையத்தில் இன்று மரவள்ளி சாகுபடி பயிற்சி

நாமக்கல்: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் இன்று மரவள்ளி சாகுபடியில் நவீன தொழில் நுட்பம் என்ற தலைப்பில் ஒரு நாள் இலவச பயிற்சி நடக்க உள்ளது. நாமக்கல் மோகனூர் சாலையில் அமைந்துள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் விவசாயிகளுக்கு பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இன்று மரவள்ளி சாகுபடி சம்மந்தமாக மரவள்ளியில் உயர் தொழில்நுட்பம் என்ற தலைப்பில் ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்கிறது. பயிற்சியில் மரவள்ளியில் உள்ள உயர் ரகம், நடும் பருவம், நடவு முறை, விரைவு பெருக்க முறை, நடவுக்கு ஏற்ற குச்சிகள், கரணைத் தேர்வு, சொட்டு நீர் பாசனம் ஆகியவை குறித்து பல்வேறு பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில் பங்கேற்க விருப்பம் உள்ளோர் பெயர் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

* வரும் 18ம் தேதி நாட்டுக்கோழி, வான்கோழி மற்றும் காடை வளர்ப்பானில் குஞ்சு பொறிப்பான்களின் பங்கு மற்றும் மேலாண்மை என்ற தலைப்பில் இலவச பயிற்சி நடக்கிறது. பயிற்சியில் குஞ்சு பொறிப்பகத்தின் முக்கியத்துவம், அடை முட்டைகள் பாதுகாக்கும்முறை, குஞ்சு பொறிப்பாக பராமரிப்பு முறை உள்ளிட்டவை குறித்து விளக்கிக் கூறப்பட உள்ளது. இப்பயிற்சியில் பங்கேற்க விருப்பம் உள்ளோர் வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் 17ம் தேதிக்குள் பெயர் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

### நிலக்கடலை இடு பொருளுக்கு 50 சதவீத மானிய விலை: உதவி இயக்குனர் தகவல்

ராசிபுரம்: "நிலக்கடலை பயிருக்கு தேவையான இடுபொருட்கள் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகிறது' என, எலச்சிபாளையம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் லோகநாத பிரகாசம் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: எலச்சிபாளையம் வட்டாரத்தில் நிலக்கடலை பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் நிலக்கடலையில் ஒட்டு மொத்த ஊட்டச்சத்து கரைசல் தெளித்து கூடுதல் மகசூல் எடுக்கலாம்.

ஒரு முறை ஒரு ஹெக்டர் பரப்பிற்கு தெளிப்பு செய்ய 2.5 கிலோ டி.ஏ.பி., ஒரு கிலோ அம்மோனியம் சல்பேட், 500 கிராம் போராக்ஸ் போன்ற உரச்சத்துகளை 37 லிட்டர் நீரில் ஒரு நாள் முழுவதும் ஊற வைக்க வேண்டும். பின், மறுநாள் காலை கரைசலை வடிகட்டினால் அதிலிருந்து 32 லிட்டர் தெளிந்த கரைசல் கிடைக்கும். அதை 468 லிட்டர் நீரில் கலந்து 500 லிட்டர் வரும்படி செய்து கொள்ள வேண்டும். இக்கரைசலை தெளிக்கும் பொழுது அதனுடன் 350 மில்லி பிளானோபிக்ஸ் கலந்து தெளிக்க வேண்டும்.

நிலக்கடலை விதைப்பு செய்த 25ம் நாள் ஒரு முறையும், 35ம் நாள் இரண்டாம் முறையும் மண்ணில் போதிய ஈரம் இருக்கும் போது தெளிக்க வேண்டும். அதனால், நல்ல திரட்சியாக காய்கள் பிடித்து கூடுதல் மகசூல் கிடைக்கும். ஊட்டச்சத்து கரைசலை தெளிக்க தேவையான இடு பொருட்கள் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகிறது. நிலக்கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் எலச்சிபாளையம் மற்றும் வேலகவுண்டம்பட்டி வேளாண் விரிவாக்க மையங்களை அணுகி இவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

### ஏல மையத்தில் தேங்கியது தேயிலை தூள் : குறைந்தபட்ச விலை கிலோவுக்கு ரூ.56

குன்னூர் : குன்னூர் தேயிலை ஏலத்தில், வர்த்தகர்களின் பங்களிப்பு குறைந்ததால், பெருமளவு தேயிலை தூள் தேங்கியது; தேயிலை தூளின் குறைந்தபட்ச விலை கிலோவுக்கு ரூ.56 ஆக இருந்தது.

குன்னூர் தேயிலை ஏல மையத்தில் விற்பனை எண் 6க்கான ஏலம் நடத்தப்பட்டது; மொத்தம் 15.84 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு இருந்தது; இலை ரகம் 10.06 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 5.78 லட்சம் கிலோவும் அடங்கும். உள்நாட்டு, ஏற்றுமதி வர்த்தகம் களைகட்டவில்லை. ஏற்றுமதி வர்த்தகத்தை பொறுத்தவரை, பாகிஸ்தான், எகிப்து உட்பட நாடுகளின் வர்த்தகர்கள் குறைந்தளவு தேயிலை தூளை மட்டுமே வாங்கினர். ஆந்திரா, கர்நாடகா, குஜராத், மகாராஷ்டிரா, பஞ்சாப் உட்பட உள்நாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பும் வெகுவாக குறைந்திருந்தது. விற்பனை களைகட்டாததால், அனைத்து ரக தூளின் விலையும் கிலோவுக்கு 2 ரூபாய் சரிந்தது; விற்பனைக்கு வந்த தேயிலை தூளில் 35 சதவீதம் தேக்கமடைந்தது.

சி.டி.சி., ரக விற்பனையை பொறுத்தவரை, தர்மோனா தேயிலை தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு அதிகபட்சம்

கிலோவுக்கு 135 ரூபாய் கிடைத்தது; 60க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன. ஆர்தோடக்ஸ் உற்பத்தியில், கர்சன் தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு அதிகபட்சம் 173 ரூபாய் விலை கிடைத்தது; 27க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன.

விலை நிலவரத்தை பொறுத்தவரை, இலை ரக விற்பனையில், சாதாரண ரக தூளுக்கு கிலோ 56-60 ரூபாய், சிறந்த ரகத்துக்கு 85-120 ரூபாய் விலை கிடைத்தது. டஸ்ட் ரகத்தில் சாதாரண ரகத்துக்கு 55-59 ரூபாய், சிறந்த ரகத்துக்கு 90-125 ரூபாய் விலை கிடைத்தது. விற்பனை எண் 7க்கான ஏலம் வரும் 18, 19ம் தேதிகளில் நடத்தப்படுகிறது; மொத்தம் 15.66 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது; இலை ரகம் 10.41 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 5.25 லட்சம் கிலோவும் அடங்கும். இது, கடந்த ஏலத்தை விட 18 ஆயிரம் கிலோ மட்டுமே குறைவு.

கடந்த ஒரு மாதமாக ஏலத்தில் தேக்க நிலை தொடர்கிறது. தேக்கமடையும் தேயிலை தூள், அடுத்தடுத்து வரும் ஏலத்தில் சேர்த்து விற்கப்படுவதால், வர்த்தகர்கள் தேயிலை தூளை வாங்க ஆர்வம் காட்டுவதில்லை எனக் கூறப்படுகிறது; வட மாநிலங்களில் தேவைக்கு அளவாக தேயிலை தூள் இருப்பில் இருப்பதால், வட மாநில வர்த்தகர்களின் பங்களிப்பும் குறைந்து காணப்படுகிறது. விலை சரிவால், கடந்த வாரத்தை போன்றே ஒரு கிலோ பசுந்தேயிலைக்கு 12.50 - 13.00 ரூபாய் வழங்கப்பட்டது. நீலகிரி தேயிலை தூள் மீது உள்நாட்டு, ஏற்றுமதி வர்த்தகர்களின் கவனம் திரும்பினால் மட்டுமே ஏலம் களைகட்டும்.

### நிரந்தர விலை கிடைக்க தரம் இருக்கணும்' : தேயிலை வாரிய செயல் இயக்குனர் அறிவுரை

மஞ்சூர் : ""நிரந்தர விலை கிடைக்க, தரமான பசுந்தேயிலை வினியோகிக்க வேண்டும்,'' என, தேயிலை வாரிய செயல் இயக்குனர் தெரிவித்தார். மஞ்சூர் அருகே கைகாட்டி கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில், தேயிலை தர மேம்பாடு கருத்தரங்கு மற்றும் திய டிரையர் திறப்பு விழா நடத்தப்பட்டது.தேயிலை வாரிய செயல் இயக்குனர் நசீம், சிறப்பு விருந்தினராக பேசுகையில், ""தேயிலையில் தரத்தை கடைபிடிப்பதால் தான், 3.50 ரூபாயிலிருந்த விலை தற்போது 15 ரூபாய்க்கு உயர்ந்துள்ளது. பசுந்தேயிலையை பறிக்க கத்தியை பயன்படுத்துவதால், செடியின் எதிர்காலத்தை இழக்கிறோம்; கத்தி பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

நிரந்தர விலை கிடைக்க தரமான பசுந்தேயிலை வினியோகிக்க வேண்டும்,'' என்றார். புதிய டிரையர் குறித்து, தனி அலுவலர் சாமிநாதன் பேசுகையில், ""ஒரு மணி நேரத்தில், 300 கிலோ பசுந்தேயிலை உற்பத்தி செய்ய முடிந்தது. புதிய டிரையர் மூலம் ஒரு மணி நேரத்தில் 450 கிலோ உற்பத்தி செய்ய முடியும். ராண்டில், 10 லட்சம் கிலோ தேயிலை தூள் உற்பத்தியில் 19.2 லட்சம் கிலோ விறகு பயன்படுத்தப்பட்டது; இந்த டிரையர் மூலம் 12 லட்சம் கிலோ விறகு மட்டுமே பயன்படுத்தப்படும்,'' என்றார். டீ மேக்கர் மனோகர், பிரகாஷ் உட்பட பலர் பங்கேற்றனர். தேயிலை வாரிய இணை இயக்குனர் டியோரி, சிறு தேயிலை விவசாய சங்க தலைவர் ரங்கையா, கைகாட்டி கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை தனி அலுவலர் சுவாமிநாதன், விஞ்ஞானிகள் சேதுராமன், குமாரவடிவேலு, சண்முகம் முன்னிலை வகித்தனர்.

மார்ச் மாதம் போட்டி: தேயிலை வாரிய செயல் இயக்குனர் நசீம் கூறியதாவது: தேயிலை வாரியம் மற்றும் உபாசி இணைந்து 2005ம் ஆண்டு முதல் சிறந்த தேயிலை தூள் உற்பத்தி செய்யும் நிறுவனத்துக்கு "கோல்டன் லீப்' விருது வழங்கி வருகின்றன. நடப்பாண்டு 6வது "கோல்டன் லீப் விருது'க்கான போட்டி மார்ச் 9, 10ம் தேதிகளில் துபாயில் நடத்தப்படுகிறது. தென்னிந்தியாவை சேர்ந்த மூணார், ஆனைமலை, வயநாடு, நீலகிரி, வண்டிபெரியார் மற்றும் கர்நாடக பகுதிகளை சேர்ந்த 200க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. பங்கேற்கும் போட்டியாளர் குறைந்தபட்சம் 500 கிலோ தேயிலை தூள் உற்பத்தி செய்ய வேண்டும். இதிலிருந்து மாதிரி எடுத்து உணவு கலப்பட பரிசோதனை மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து பரிசோதனை செய்யப்படும். முதற்கட்டப் போட்டியில் இந்தியாவை சேர்ந்த முன்னணி நிறுவனங்களின் "டீ டேஸ்டர்கள்' தேநீரை ருசிப்பார்கள்; தகுதி பெறும்

தேயிலை தூள் துபாயில் நடத்தப்படும் போட்டியில் வைக்கப்படும். சர்வதேச "டீ டேஸ்டர்கள்' தேயிலையை ருசி பார்த்த பின், சிறந்தவைக்கு "கோல்டன் லீப் விருது'  வழங்கப்படும்.

நீலகிரியில் போஜராஜுக்கு சொந்தமான இட்டக்கல் மற்றும் விக்னேஸ்வரா தேயிலை தொழிற்சாலைகளுக்கு இந்த விருது கிடைத்துள்ளது. முதன் முறையாக அரசின் கட்டுபாட்டில் உள்ள பந்தலூர் இன்ட்கோ தேயிலை தொழிற்சாலைக்கு, கடந்தாண்டு இந்த விருது கிடைத்தது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு, நசீம் கூறினார்.

### மலர் கண்காட்சியில் 15 ஆயிரம் தொட்டிகள்! பழமையான மரங்களை சுற்றி அலங்காரம்

ஊட்டி : ஊட்டியில் நடப்பாண்டு நடத்தப்படும் மலர் கண்காட்சியில், 15 ஆயிரம் மலர் தொட்டிகள் வைக்கப்பட உள்ளன. கோடை சீசனுக்காக, தோட்டக்கலைத் துறை பராமரிப்பில் உள்ள ஊட்டி தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, மரவியல் பூங்காவை பொலிவுபடுத்தும் பணிகள் துரிதமாக நடந்து வருகின்றன.  பல்லாயிரக்கணக்கான மலர் நாற்றுகள் தயார் செய்யப்பட்டு, மலர் தொட்டிகளிலும், பாத்திகளிலும் பதிக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.
பனிப்பொழிவால் மலர் நாற்றுகள் பாதிக்காமல் இருக்க "கோத்தகிரி மலார்' செடிகள் கொண்டு மூடப்பட்டுள்ளது. பூங்காவில் உள்ள புல்வெளிகளை சீசனுக்குள் பொலிவுபடுத்த, உரம் கலந்த மண்வகைகளை புல்தரையில் பரப்பும் பணி, 20ம் தேதி முதல் துவங்கப்பட உள்ளது.

தற்போது, பூங்கா குளங்கள் தூர்வாரி சுத்தப்படுத்தும் பணி துவங்கப்பட்டுள்ளது. மலர் செடிகளுக்கான நீர், குளங்களில் இருந்து பயன்படுத்தப்பட்டு வருவதால், சேமிப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மலர் கண்காட்சியின் போது, சுற்றுலாப் பயணிகளை கவர வைக்கப்படும் 10 ஆயிரம் மலர் தொட்டிகளில், 250 வகை மலர்கள் பதிக்கப்பட்டுள்ளன; மேலும் 5,000 புதிய மலர் தொட்டிகளை தயார்படுதும் பணிகளும் நடந்து வருகின்றன. மலர்களை, நூற்றாண்டு கடந்த முக்கிய மரங்களை சுற்றி வைக்கவும், சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான தண்ணீர் வசதி ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. பணிகளால், கோடை சீசனின் போது தாவரவியல் பூங்கா பொலிவாக காட்சியளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதேபோல, ஊட்டி மரவியல் பூங்காவிலும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்தாண்டுகளில், பூங்காக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது; வரும் கோடை சீசனில், எண்ணிக்கையை அதிகரிக்க செய்ய போதிய விளம்பரம் செய்யவும், 10 முதல் 20 ரக புதிய மலர் வகைகளை அறிமுகப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தோட்டக்கலை துறை உதவி இணை இயக்குனர் பிரகாசம் கூறுகையில், ""கடந்தாண்டை விட சற்று முன்னதாகவே தாவரவியல் பூங்காவில் கோடை சீசனுக்கான பணிகள் துவங்கப்பட்டுள்ளன. புல்தரை பராமரிப்பு பணிகள், 20ம் தேதி துவங்கப்படும்.பூங்காவில் நீர் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்தாண்டுகளில் 10 ஆயிரம் மலர் தொட்டிகள் கண்காட்சிக்கு தயார் செய்யப்பட்டன; நடப்பாண்டு 15 ஆயிரம் மலர் தொட்டிகள் கோடை சீசனுக்காக தயார் செய்யப்பட்டு, மலர் கண்காட்சியின் போது, நூற்றாண்டு பழமை வாய்ந்த மரங்களை சுற்றி வைக்கப்படும்,'' என்றார்.

### புதுகை மாவட்டத்தில் பனிப்பொழிவு 18 முதல் 20 சதவீதம் நெல் கொள்முதல்? டெல்டா விவசாயிகள் எதிர்பார்ப்பு

புதுக்கோட்டை: "புதுக்கோட்டை மாவட்டத்தில் பனிப்பொழிவு தொடர்வதால் 18 முதல் 20 சதவீதம் வரை ஈரப்பதம் உள்ள நெல்லையும் கொள்முதல் செய்யவேண்டும்' என டெல்டா பகுதி விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.
புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த டிசம்பர் மாதம் துவங்கிய பனிப்பொழிவு தொடர்ந்து நீடிக்கிறது. மாலை ஐந்து ணிக்கு துவங்கும் பனிப்பொழிவு காலை ஒன்பது மணிவரையிலும் தொடர்கிறது.

இந்நிலையில் மாவட்டத்தின் பல பகுதிகளில் சம்பா நெல் அறுவடை துவங்கியுள்ளது. குறிப்பாக காவிரி டெல்டா பகுதிகளான அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி, ஆலங்குடி, கறம்பக்குடி ஆகிய பகுதிகளில் கடந்த ஒருவாரமாக அறுவடை தொடர்ந்து நடக்கிறது. விவசாயிகளிடமிருந்து அறுவடை செய்த நெல்லை நேரடியாக கொள்முதல் செய்யும் விதமாக மாவட்டம் முழுவதும் நேற்றுவரை 55 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது.

இங்கு 16 சதவீதம் வரையிலான ஈரப்பதம் கொண்ட நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது. இதன் காரணமாக அறுவடை செய்த நெல்லை இரண்டு நாட்கள் வரை வெயிலில் காயவைத்த பின்னரே அவற்றை மூட்டை கட்டி கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டு செல்லவேண்டிய கட்டாய நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இவை விவசாயிகளுக்கு பலத்த இழப்பை ஏற்படுத்தும் என்பதால் பனிப்பொழிவை கவனத்தில் கொண்டு 18 முதல் 20 சதவீதம் வரையிலான ஈரப்பதம் கொண்ட நெல்லையும் கொள்முதல் செய்ய நெல் கொள்முதல் நிலையங்களுக்கு உத்தரவிட வேண்டும். நெல் கொள்முதலில் இடைதரகர்கள் தலையிடுவதை அறவே ஒழிக்கவேண்டும். அறந்தாங்கி மற்றும் ஆவுடையார்கோவில் பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா நெல் பயிரை புகையான் நோய் தாக்கியுள்ளதால் அப்பகுதி விவசாயிகள் பலத்த இழப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

இதை ஈடுசெய்யும் விதமாக புகையான் நோய் தாக்குதல் குறித்து அப்பகுதிகளில் நேரடியாக ஆய்வு செய்தபின் முறையாக கணக்கெடுப்பு நடத்தி பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் தேசிய பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீட்டுத் தொகை பெற்றுத்தர மாவட்ட நிர்வாகம் முன்வர வேண்டும் என டெல்டா பகுதி விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

### நெல் விலை சரிவு: விவசாயிகள் கவலை

திருவாடானை : நெல்விலை வீழ்ச்சியால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். திருவாடானை தாலுகாவில் தற்போது அறுவடை பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. அறுவடைக்கு முன்பு நெற்பழம் மற்றும் புகையான் நோய் தாக்குதலால் விளைச்சல் பெரிதும் பாதிக்கபட்டது. தற்போது அறுவடை செய்யபட்ட பொன்னி ரகம் 60 கிலோ எடையுள்ள மூடை 680ரூபாய்க்கும், ஜெ.சி.எல். ரகம் 600ரூபாய்க்கும் வியாபாரிகள் வாங்குகின்றனர். இதே ரகங்கள் சென்ற ஆண்டு 1000 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்யபட்டது. தற்போது நெல் விலை குறைவால் விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.
இது குறித்து விவசாயி சுப்பிரமணியன் கூறியதாவது: நோய் தாக்குதல் நெல்லை வியாபாரிகள் வாங்க மறுக்கின்றனர். நெல்விலையும் குறைந்துள்ளது. இதனால் விவசாயிகளுக்கு பெரிதும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது, என்றார்.

### தோட்டக்கலை மூலம் சுற்றுலாவுடன் பயிற்சி: விவசாயிகள் பதிவு செய்ய அழைப்பு

தஞ்சாவூர்: தேசிய தோட்டக்கலை இயக்க திட்டம் மூலம் வெளி மற்றும் உள் மாநில தொழில் நுட்ப பயிற்சி மற்றும் சுற்றுலா ஏழு நாட்கள் மேற்கொள்ள உள்ளனர். இதில், 200 விவசாயிகள் வெளி மாநிலத்துக்கும், ஆயிரம் விவசாயிகள்

உள் மாநிலத்துக்கும் அழைத்துச் செல்ல இலக்கு பெறப்பட்டுள்ளது. எனவே, விருப்பம் உள்ள தோட்டக்கலைப்பயிர்கள் சாகுபடி செய்யும், செய்ய விரும்பும் விவசாயிகள் அவர்களது பகுதியில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குனர், தோட்டக்கலை அலுவலர்கள், வேளாண் உதவி அலுவலர்களை அணுகி விதிமுறைகளுக்கு உட்பட்டு இச்சுற்றுலா மற்றும் பயிற்சியில் பங்கேற்கலாம்.

யூனியன் வாரியாக அந்தந்த பகுதியில் உள்ள பொறுப்பு அலுவலர்களை தொடர்பு கொள்ள வேண்டும். இதன்படி, தஞ்சை, திருவையாறு யூனியனில் உள்ளவர்கள் தஞ்சை நாஞ்சிக்கோட்டை ரோடு தோட்டக்கலை உதவி இயக்குனரையும், பூதலூர், ஒரத்தநாடு பகுதியினர் பூதலூர் பஞ்சாயத்து அலுவலக வளாகத்தில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குனவனரையும், கும்பகோணம், திருவிடைமருதூர் யூனியனில் உள்ளவர்கள் சாக்கோட்டை தோட்டக்கலை உதவி இயக்குனரிடமும், பாபநாசம், அம்மாபேட்டை, திருப்பனந்தாள் யூனியனில் உள்ளவர்கள் பாபநாசம் தோட்டக்கலை உதவி இயக்குனரையும், பட்டுக்கோட்டை, மதுக்கூர் யூனியனில் உள்ளவர்கள் பட்டுக்கோட்டை முத்துப்பேட்டை ரோட்டில் உள்ள உதவி இயக்குனரையும், பேராவூரணி, சேதுபாவாசத்திரம், திருவோணம் பகுதியில் உள்ளவர்கள் பேராவூரணி தாலுகா அலுவலகம் ரோட்டில் உள்ள உதவி இயக்குனரையும் தொடர்பு கொள்ள வேண்டும். விதிமுறைகளுக்கு உட்பட்டு தகுதியானவர்கள் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ள வேண்டும், என தஞ்சை தோட்டக்கலைத்துறை சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

### தி.மலையில் 19ம் தேதி விவசாயிகள் குறைதீர்வு

திருவண்ணாமலை:திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்வு கூட்டம் வரும் 19ம் தேதி நடக்கிறது.இது குறித்து தி.மலை கலெக்டர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:பிப்ரவரி மாதத்துக்கான விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் வரும் 19ம் தேதி காலை 11 மணியளவில் கலெக்டர் ராஜேந்திரன் தலைமையில் தி.மலை கலெக்டர் அலுவலகத்தில் நடக்கிறது.
கூட்டத்தில், மாவட்டத்தில் உள்ள அனைத்து துறை அலுவலர்களும் கலந்துகொண்டு விவசாயிகளின் குறைகள் மற்றும் கோரிக்கைகளுக்கு பதில் அளிக்க உள்ளனர். எனவே, இந்த கூட்டத்தில் விவசாயிகள் கலந்துகொண்டு பயன் அடையலாம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

குடியாத்தம்: குடியாத்தம் வேளாண்மை ஐசோபார்ம் எண்ணெய் வித்துக்கள் திட்டம் சார்பில் நடந்து வரும் விவசாயிகளுக்கான 2நாள் பயிற்சி முகாமில் இடுபொருட்கள் வழங்கப்பட்டது.குடியாத்தம் அடுத்த அக்ராவரம் கிராமத்தில் வேளாண்மை ஐசோபார்ம் எண்ணெய் வித்துக்கள் திட்டம் சார்பில் விவசாயிகளுக்கு 2நாள் பயிற்சி முகாம் நடந்தது. பயிற்சியினை குடியாத்தம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சித்தகங்கைய்யா துவக்கி வைத்தார். இதில், மாவட்ட பஞ்., துணைத்தலைவர் சீவூர் துரைசாமி கலந்து கொண்டார். பயிற்சியில் குடியாத்தம் வட்டார வேளாண்மை அலுவலர் சுஜாதா, மணிலா, எள், சூரியகாந்தி, ஆமணக்கு மற்றும் தென்னை சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து செயல் விளக்கம் செய்து காட்டினார். இதில் அக்ராவரம், ரங்கசமுத்திரம், பெரும்பாடி, எர்த்தாங்கல், சீவூர் மற்றும் ஜங்கலாபல்லி கிராமங்களை சேர்ந்த 50விவசாயிகள் கலந்து கொண்டனர். மேலும் பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை, பயிற்சி கையேடுகள் மற்றும் இடுபொருட்கள் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் சரவணகுமார், சரவணன் ஆகியோர் செய்திருந்தனர்.

### பருத்தி இறக்குமதிக்கு எல்.சி., பெறுவதில் சிக்கல் : தேங்கும் பருத்தியால் நூல் விலை குறைய வாய்ப்பு

திருப்பூர் : பருத்தி இறக்குமதி செய்யும் நிறுவனங்கள், வங்கிகளிடம் எல்.சி., பெறுவதில் ஏற்படும் காலதாமதத்தால், பருத்தி ஏற்றுமதியில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால், பருத்தியில் தேக்கம் ஏற்பட்டு, விலை குறைய துவங்கியுள்ளது. பருத்தி விளைச்சல் பாதிப்பு காரணமாக, கடந்த பருத்தி ஆண்டில் 2009-10ல் சர்வதேச அளவில் பருத்தி பஞ்சு விலை உயர்ந்தது. இதனால், வரலாறு காணாத வகையில் நூல் விலை உயர்ந்தது. உலக நாடுகளில் பருத்தி விளைச்சல் பாதித்திருந்த வேளையில், இந்தியாவில் பருத்தி விளைச்சல் அதிகரித்திருந்தது. இதனால், ஏற்றுமதிக்கு மத்திய, மாநில அரசுகள் பச்சைகொடி காட்டின. விலை அதிகமாக கிடைக்கும் என்ற நம்பிக்கையில், பருத்தி விவசாயிகளும் பருத்தி பஞ்சுகளை ஏற்றுமதி நிறுவனங்களுக்கு விற்பனை செய்தனர்.

இதனால், உள்நாட்டு பயன்பாட்டுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. இத்தகைய தட்டுப்பாட்டு காரணமாக, நூல் விலையும் உயரத்துவங்கியது. எதிர்கொள்ள முடியாத நூல் விலை உயர்வால், பருத்தி ஏற்றுமதிக்கு தடைவிதிக்க வேண்டும் என, உற்பத்தியாளர்கள் கோரிக்கை வைத்தனர். உள்நாட்டு தேவை போக, மிஞ்சிய பருத்தி மட்டுமே ஏற்றுமதி செய்யப்படும் எனக்கூறி, மத்திய அரசு பருத்தி ஏற்றுமதிக்கு தடைவிதிக்க மறுத்தது. இதனால், உள்நாட்டில் உள்ள உள்நாட்டு விற்பனை பனியன் மற்றும் ஏற்றுமதி பனியன் உற்பத்தியாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். இருப்பினும், பருத்தி ஏற்றுமதி முடிவில் அரசு பின்வாங்கவில்லை.பருத்தியை இறக்குமதி செய்யும் நிறுவனங்கள், ஏற்றுமதியாளர்களுக்கு பணப்பட்டுவாடாவுக்கு உறுதி அளிக்கும் கையில், வங்கிகளிடம் இருந்து "லெட்டர் ஆப் கிரெடிட்' (எல்.சி.,) பெற வேண்டும். தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி மாறாத நிலையில், முன்னணி வங்கிகள் எல்.சி., வழங்குவதில் அதிகம் யோசிக் கின்றன. இதனால், ஏற்றுமதிக்கு பதிவு செய்து தயார் செய்யப் பட்ட பருத்தி பேல்கள், தற் போது துறைமுகங்களில் காத்திருக்கின்றன.

பருத்தி ஏற்றுமதியில் எல்.சி., பிரச்னை வெளியே தெரியத்துவங்கியதால், பருத்தியை ஏற்றுமதிக்கு அனுப்புவதில் இங்குள்ள வியாபாரிகள் யோசிக்கின்றனர். விலை கிடைத்தால் போதும் என்பதால், உள்ளூர் நூற்பாலைகளுக்கு கொடுக்கின்றனர். இதனால், சில மாதங்களாக ஏற்பட்ட பருத்தி தட்டுப்பாடு குறைந்து விட்டது. தேவையான அளவு பருத்தி கிடைக்கிறது. இதனால், உச்சத்தில் இருந்த பருத்தி விலையில், ஒரு கேண்டிக்கு (355.50 கிலோ) 1,500 ரூபாய் முதல் 2,000 ரூபாய் வரை சரிவு ஏற் பட்டுள்ளது.கடந்த மாதங்களில் நடந்த சாய ஆலைகள் வேலை நிறுத்தம், பொங்கல் விடுமுறை உள்ளிட்ட காரணங்களால், பனியன் நிறுவனங்கள் உற்பத்தியை குறைத்துக் கொண்டன. இதனால், கிலோவுக்கு 15 ரூபாய் வரை விலை உயர்ந்ததால், நூற்பாலைகளிலும் நூல் வர்த்தகம் பாதிக் கப்பட்டது. ஆரம்பத் தில், குறித்த நேரத்தில் ஆர்டர் களை முடிக்க வேண்டிய கட்டாயத்தில், நூல்கள் கொள்முதல் செய்யப்பட்டன; ஆர்டரை முடித் ததும், நூல் கொள்முதல் சரியத்துவங்கியது.

நூல் விலை உயர்ந்ததால், நூற்பாலைகள் பக்கம் வியாபாரிகள் வந்து செல்வதும் குறைந்தது. தற்போது, பஞ்சு விலை குறைந் துள்ளதால், நூல் விலையை குறைத்துக் கொடுக்கவும், நூற் பாலைகள் தயாராகி விட்டன. இருப்பினும், நூல் வியாபாரிகள் கால்பதிக்க அஞ்சுகின்றனர். பருத்தி பஞ்சு விலை குறைவதால், கையை கடிக்காதபடி, நூல் விலையை குறைத்து, விற்பனையை வேகப்படுத்த வேண் டும் என, நூற்பாலை உரிமையாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## *தனியார் அமைப்பு சார்பில் சணல் பொருட்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி மேயர் தொடங்கி வைத்தார்*

*சென்னை, பிப். 16–*
*பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதனால் ஏற்படும் மாசுபாடு குறித்தும் சணல் பொருட்கள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும் தனியார் அமைப்பு ஒன்று விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிகழ்ச்சியில் பல்வேறு கல்லூரியை சேர்ந்த 500 மாணவர்கள் கலந்து கொண்டனர். சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகை வளாகத்தில் வைத்து நடைபெற்ற நிகழ்ச்சியை சென்னை மாநகராட்சி மேயர்.மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.*
*நிகழ்ச்சிக்கு மத்திய ஜவுளித்துறை இணை செயலாளர் குபேந்தர்சிங் தலைமை தாங்கினார். இதில் கலந்து கொண்ட மாணவர்கள் சென்னையின் பல்வேறு பகுதிகளுக்கு சென்று பொதுமக்களிடம் துண்டு பிரசுரங்கள் கொடுத்து சணல் பொருட்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றனர்.*

---

## *நடப்பு 2009–10–ஆம் ஆண்டு பருவத்தில் உணவு தானியங்கள் உற்பத்தி 7.51 சதவீதம் குறைய வாய்ப்பு*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*சென்ற ஆண்டு கோடை காலத்தில், கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு கடும் வறட்சி ஏற்பட்டது. இதனையடுத்து, நடப்பு 2009–10–ஆம் ஆண்டு பருவத்தில் (அக்டோபர் – செப்டம்பர்), இந்தியாவில் உணவு தானியங்கள் உற்பத்தி 7.51 சதவீதம் சரிவடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*

### *மதிப்பீடு*

*கடந்த 2008–09–ஆம் ஆண்டு பருவத்தில் உணவு தானியங்கள் உற்பத்தி 23.45 கோடி டன்னாக இருந்தது. இது, நடப்பு 2009–10–ஆம் ஆண்டு பருவத்தில் 21.69 கோடி டன்னாக குறைய வாய்ப்புள்ளது. மத்திய அரசு வெளியிட்டுள்ள உணவு தானியங்கள் உற்பத்தி குறித்த இரண்டாவது முன்கூட்டிய மதிப்பீட்டின் வாயிலாக இது தெரிய வந்துள்ளது.*

*ஜூன் மாதத்தில் தொடங்கி செப்டம்பர் மாதத்துடன் நிறைவடையும் கரீஃப் பருவத்திலும், அக்டோபர் மாதம் தொடங்கி மார்ச் மாதத்தில் நிறைவடையும் ரபி பருவத்திலும் உணவு தானியங்கள் உற்பத்தி குறித்து மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.*
*நெல், கரும்பு போன்றவை கரீஃப் பருவத்தில் பயிரிடப்படுகின்றன. இதில், நெல் உற்பத்தி நடப்பு ஆண்டு பருவத்தில் 9.92 கோடி டன்னிலிருந்து 11.71 சதவீதம் குறைந்து 8.76 கோடி டன்னாக சரிவடையும் என கணிக்கப்பட்டுள்ளது.*

### *கரும்பு*

*கரும்பு உற்பத்தி 28.50 கோடி டன்னிலிருந்து 25.12 கோடி டன்னாக குறையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்ற ஓர் ஆண்டு காலத்தில், சர்க்கரை விலை இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 2.77 கோடி டன்னிலிருந்து 2.63 கோடி டன்னாக குறையும் என முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.*
*அதேசமயம், பருப்பு வகைகள் உற்பத்தி 1.46 கோடி டன்னிலிருந்து 1.47 கோடி டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*உள்நாட்டில், உணவு பொருள்கள் விலை உயர்ந்து வருவது, மத்திய அரசுக்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது. உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 18 சதவீதத்தை எட்டி உள்ளது.*

***ரபி பருவம்***

*காரீஃப் பருவத்தில் (கோடை காலம்) வறட்சி நிலவிய போதிலும், ரபி பருவத்தில் (குளிர் காலம்) உணவு தானியங்கள் உற்பத்தி ஓரளவிற்கு நன்றாக இருக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பருவநிலை சாதகமாக அமைந்தால், உணவு தானியங்கள் உற்பத்தி, தற்போதைய மதிப்பீட்டைக் காட்டிலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*
*உணவு பொருள்கள் விலையை கட்டுப்படுத்தும் வகையில், மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் ஓர் அங்கமாக, அண்மையில் பல லட்சம் டன் அரிசி மற்றும் கோதுமையை பொது விநியோகத்திற்கு அனுப்பி உள்ளது.*

---

## *ஏற்றுமதி சலுகைகள் மத்திய பட்ஜெட்டிற்கு பிறகு மறு ஆய்வு செய்யப்படும்*

*அமிதி சென்*
*புதுடெல்லி*
*கடந்த 2008–ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து உலகின் பல்வேறு நாடுகளில் பொருளாதாரம் மிகவும் பாதிப்புக்குள்ளானது. இதனால், நம் நாட்டின் ஏற்றுமதி மிகவும் சரிவடைந்து போனது.*

***வளர்ச்சி பாதை***

*இதனை கருத்தில் கொண்டு, மத்திய வர்த்தக அமைச்சகமும், நிதி அமைச்சகமும், ஏற்றுமதியாளர்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்கின. தற்போது, உலகின் பல நாடுகளின் பொருளாதாரம் மீண்டும் வளர்ச்சிப் பாதைக்கு திரும்பி உள்ளதால், நாட்டின் ஏற்றுமதி கடந்த மூன்று மாதங்களாக அதிகரிக்கத் தொடங்கி உள்ளது. மத்திய அரசின் இந்த ஏற்றுமதி சலுகை திட்டங்கள் நடப்பு 2010–ஆம் ஆண்டு மார்ச் 31–ந் தேதியுடன் நிறைவடைகிறது.*
*இந்த நிலையில், மத்திய அரசு, ஏற்றுமதி நிறுவனங்களுக்கு வழங்கி வரும் சலுகைகளை நீட்டிப்பது குறித்து ஆய்வு செய்து வருகிறது. இருப்பினும், தற்போதைய நிலையில், இச்சலுகைகள் விலக்கிக் கொள்ளப்பட மாட்டாது என்றும், வரும் மத்திய பட்ஜெட் அறிவிப்பிற்கு பிறகே இது குறித்து ஆய்வு செய்யப்படும் என்றும் மத்திய அரசின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.*

***ஏற்றுமதி***

*நாட்டின் ஏற்றுமதி சரிவடைந்ததை கருத்தில் கொண்டு, ஏற்றுமதியாளர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், மத்திய அரசு குறைந்த வட்டியில் ஏற்றுமதி கடன்களையும், பல்வேறு வரிச் சலுகைகளையும் வழங்கியது. இதனால், ஏற்றுமதியாளர்களுக்கு ஓரளவிற்கு பலன் கிடைத்து வருகிறது. இருப்பினும், வரிச் சலுகைகளால், அரசின் நிதிப் பற்றாக்குறை அதிகரித்துள்ளது என்பதையும் மத்திய அரசு கவனத்தில் கொண்டுள்ளது.*

*அரசின் ஏற்றுமதி சலுகைகளால், பழங்கள், காய்கறிகள், கடல் உணவு பொருள்கள், துணி வகைகள், புகையிலை போன்ற பொருள்களின் ஏற்றுமதி மிகவும் சிறப்பாக வளர்ச்சி கண்டுள்ளது. மேலும், நவரத்தினங்கள், ஆபரணங்கள், மருந்து பொருள்கள், பிளாஸ்டிக் மற்றும் பெட்ரோலிய பொருள்களின் ஏற்றுமதியிலும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆனால், பொறியியல், சணல், மிதியடிகள், கைவினை பொருள்கள், தோல் பொருள்கள் ஆகியவற்றின் ஏற்றுமதி*

*மிகவும் பின்தங்கியே உள்ளது. இவற்றையெல்லாம் ஆய்வு செய்து, எந்தெந்த துறைகளுக்கு சலுகைகள் நீட்டிக்கப்பட வேண்டும், எந்தெந்த துறைகளுக்கான சலுகைகளை விலக்கிக் கொள்வது என்பது குறித்து பட்ஜெட்டிற்கு பிறகு முடிவு எடுக்கப்படும் என்று மத்திய நிதி அமைச்சகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.*

*ரூ.2,000 கோடி*

*நடப்பு 2009–10–ஆம் ஆண்டில், ஏற்றுமதி சலுகைகள் வழங்கப்பட்ட வகையில், அரசுக்கு வருவாயில் ரூ.2,000 கோடி அளவிற்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது.*

*ஏற்றுமதியை அதிகரிக்கும் வகையில், மத்திய அரசு பல்வேறு சலுகைகளை வழங்கிய நிலையில், சென்ற மாதம், மத்திய வர்த்தக அமைச்சகம் கூடுதலாக 2,000 பொருள்களின் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில் ரூ.400 கோடி மதிப்பிற்கு சலுகைகளை வழங்கியது.*

## *பருப்பு வகைகள் உள்ளிட்ட உணவு பொருள்கள் விலை உயர்வால் பணவீக்க விகிதம் 8.56%–ஆக உயர்வு*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*

*மொத்த விலைக் குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் அனைத்து பொருள்களுக்கான பணவீக்க விகிதம், சென்ற ஜனவரி மாதத்தில், கடந்த 15 மாதங்களில் இல்லாத அளவிற்கு 8.56 சதவீதமாக உயர்ந்துள்ளது. சென்ற டிசம்பர் மாதத்துடன் (7.31 சதவீதம்) ஒப்பிடும்போது இது 1.25 சதவீதம் அதிகமாகும்.*

***சர்க்கரை***

*சென்ற கரீஃப் பருவத்தில், தென் மேற்கு பருவமழை கடந்த 37 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு மிகவும் மோசமாக இருந்தது. இதனால், சர்க்கரை, உருளைக்கிழங்கு, பருப்பு வகைகள் ஆகியவற்றின் விலை மிகவும் உயர்ந்து இருந்தது. பாரத ரிசர்வ் வங்கி அண்மையில் வெளியிட்ட கடன் கொள்கை ஆய்வு அறிக்கையில், நடப்பு நிதி ஆண்டில், நாட்டின் அனைத்து பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 8.5 சதவீதமாக இருக்கும் என மதிப்பீடு செய்து இருந்தது. சென்ற ஜனவரி மாதத்தில் பணவீக்க விகிதம் இதையும் விஞ்சி விட்டது என்பது குறிப்பிடத்தக்கது. நடப்பு ஆண்டு ஜனவரி மாதத்தில், சர்க்கரை விலை, சென்ற ஆண்டின் இதே மாதத்தைக் காட்டிலும் 58.96 சதவீதம் உயர்ந்துள்ளது. உருளைக்கிழங்கு மற்றும் பருப்பு வகைகளின் விலை இதே காலத்தில் முறையே 53.3 சதவீதம், 45.64 சதவீதம் அதிகரித்துள்ளது. சென்ற ஒரு மாதத்தில், துவரம் பருப்பு, கோதுமை ஆகியவற்றின் விலை முறையே 6 சதவீதம், 4 சதவீதம் உயர்ந்துள்ளது.*

*ரூ.36,000 கோடி*

*உணவு பொருள்களின் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதையடுத்து, பாரத ரிசர்வ் வங்கி அண்மையில் வெளியிட்ட கடன் கொள்கை ஆய்வு அறிக்கையில், வங்கிகளுக்கான ரொக்க இருப்பு விகிதத்தை 5 சதவீதத்திலிருந்து 5.75 சதவீதமாக உயர்த்தியது. இதனால், வங்கிகள் கூடுதலாக ரூ.36,000 கோடியை பாரத ரிசர்வ் வங்கியில் இருப்பு வைக்க வேண்டிய நிலை உருவாகும். இதனால், இந்த அளவிற்கு நாட்டில் பணப்புழக்கம் குறைந்துவிடும்.*

*தற்போது பணவீக்க விகிதம் மிகவும் உயர்ந்துள்ளதால், வங்கிகள், பாரத ரிசர்வ் வங்கியிடமிருந்து குறுகிய கால அடிப்படையில் பெறும் கடனிற்கான வட்டி விகிதம் (ரெப்போ ரேட்), மற்றும் வங்கிகள் அவற்றின் உபரி நிதியை பாரத ரிசர்வ் வங்கியில் இருப்பு வைப்பதற்காக வங்கிகளுக்கு வழங்கப்படும் கடனிற்கான வட்டி விகிதம் (ரிவர்ஸ் ரெப்போ ரேட்) உயர்த்தப்படுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.*

***பெட்ரோல்***

*பணவீக்க விகிதம் அதிகரித்து வருவதால், பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலையை மத்திய அரசு தற்போது உயர்த்தாது என ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.*

**நத்தம் பகுதியில் பூ பூக்காத மா மரங்கள்: விவசாயிகள் கவலை**

நத்தம், பிப். 11-

நத்தம் மற்றும் சாணார்பட்டி யூனியன் பகுதிகளில் பரளி, லிங்கவாடி, காசம்பட்டி, கோபால் பட்டி, சிலுவத்தூர் மற்றும் மலைக்கேணி உள்பட 100-க்கும் மேற்பட்ட கிராமங்களில் சுமார் 10 ஆயிரம் ஏக்கருக்கு மேல் மாந்தோப்புகள் உள்ளன. இதில் நோய் தடுப்பிற்காகவும், பூக்கள் பூக்க வேண்டியதற்காகவும் விவசாயிகள் 2 முறை மருந்து தெளித்துவிட்டனர்.

ஆனால் மா மரங்கள் பூக்காமல் வெறும் மரங்களாக காணப்படுகிறது. இதனால் விவசாயிகள் பெரும் கவலை கொண்டுள்ளனர். இதுபற்றி நத்தம் தொகுதி தென்னை மா மர பழப்பண்ணையின் தொகுதி அமைப்பாளர் வேம்பார்பட்டி கண்ணு முகமது அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

மங்கும் காலத்திற்கு மாங்காய், பொங்கும் காலத்திற்கு புளி என்று ஒரு பழமொழி உண்டு. அதற்கு ஏற்ப இந்த வருடம் பெரும்பாலான மா மரங்கள் வெறும் மரங்களாகவே காணப்படுகிறது. ஆனால் நேர் மாறாக புளிய மரங்கள் எல்லாம் அதிக மகசூல் தரும் கோணத்தில் பிஞ்சுகள் பிடித்துள்ளன.

அதிகமான விவசாயிகள் மாமரங்களின் வருவாயையே நம்பி உள்ளனர். ஆனால் பூவும் பிடிக்கவில்லை. பிஞ்சும் காணவில்லை வெறும் மரங்களை கண்ட விவசாயிகள் விரக்தியில் கவலை கொண்டுள்ளனர். இதனால் பல லட்சம் ரூபாய் வரை இழப்பாகும் அபாயம் உருவாகி உள்ளது.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

**மேட்டுப்பாளையம் மார்க்கெட்டில் வெள்ளைப்பூண்டு விலை குறைந்தது**

மேட்டுப்பாளையம், பிப்.8-

நீலகிரி மாவட்டத்தில் தற்போது வெள்ளைப்பூண்டு சீசன் தொடங்கியுள்ளது. இங்கிருந்து மேட்டுப் பாளையம் மார்க்கெட்டில் உள்ள வெள்ளைப்பூண்டு மண்டிகளுக்கு கடந்த வாரம் 1000 மூட்டை வெள்ளைப் பூண்டு வந்திருந்தது. வெள்ளைப்பூண்டு ஒரு கிலோ ரூ.60-லிருந்து ரூ.150 வரை விற்பனை ஆனது. ஆனால் இந்த வாரம் 1200 மூட்டை பூண்டு வந்திருந்தது. ஒருகிலோ ரூ. 50- லிருந்து ரூ.120 வரை விற்பனை ஆனது. விலையில் சரிவு காணப்பட்டது.

மேட்டுப்பாளையம் மார்க் கெட்டுக்கு நீலகிரியில் இருந்து 3 லோடு, கோலாரில் இருந்து 20 லோடு, நைனிடாலில் இருந்து 5 லோடு வந்திருந்தது. நீலகிரி கிழங்கு 45 கிலோ ரூ.600-ல் இருந்து ரூ.640 வரை விலைபோனது கோலார் கிழங்கு ரூ.480-ல் இருந்து ரூ.540 வரையும், நைனிடால் கிழங்கு ரூ.350 இருந்து ரூ.370 வரையும் விற்பனை ஆனது.

மேலும் முட்டை கோஸ் 20 லோடு, கேரட் 3 ஆயிரம் மூட்டை, பீட்ரூட், 500 மூட்டை, முள்ளங்கி 800 மூட்டை, பீன்ஸ் 1000 மூட்டை, நூல்கோல் 50 மூட்டையும், டர்னிப்ஸ் 150 மூட்டையும் வந்திருந்தது.

முட்டைகோஸ் 1 கிலோ ரூ.2 லிருந்து ரூ.3, கேரட் 1 கிலோ ரூ.12 இருந்து ரூ.18 பீட்ரூட் 1 கிலோ ரூ.10-லிருந்து ரூ.14 முள்ளங்கி 1 கிலோ ரூ.2 லிருந்து ரூ.6 வரை விற்பனை ஆனது.

பீன்ஸ் 1 கிலோ ரூ.10 லிருந்து ரூ.15 பச்சைப் பட்டாணி 1 கிலோ ரூ. 25 லிருந்து ரூ.30, நூல்கோல் 1 கிலோ ரூ.6-லிருந்து ரூ.8, டர்னிப்ஸ் 1 கிலோ ரூ.4 லிருந்து ரூ.7 வரையும் விற்பனை ஆனது.

**ராமநாதபுரம் மாவட்டத்தில் 10 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையம்: கலெக்டர் ஹரிகரன் தகவல்**

ராமநாதபுரம், பிப். 5-

தமிழக முதல்- அமைச்சர் உத்தரவின்படி விவசாயிகளின் நலன் கருதி ராமநாதபுரம் மாவட்டத்தில் ஆண்டுக்கான காரீப் பருவ நெல்லினை கொள்முதல் செய்யும் பொருட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் 10 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு உள்ளன.

அதன்படி ராமநாதபுரம், திருவாடானை, பரமக்குடி (இருப்பு) கமுதக்குடி, கமுதி, கடலாடி முதுகுளத்தூர், திருஉத்திரகோசமங்கை, பார்த்திபனூர், சனவேலி, செல்வநாயகபுரம் ஆகிய இடங்களில் நெல் கொள் முதல் நிலையங்கள் செயல்படும். இந்நிலையங்களில் கொள்முதல் செய்யப்படும் முதல்ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,100-ம் மோட்டா ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,050-ம் வழங்கப்படும். கொள்முதல் நிலையங்களில் 17 சதவீத ஈரப்பதத்துடன் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள திரிபுகளுக்கு மிகாமல் உள்ள நெல் மட்டும் கொள்முதல் செய்யப்படும்.

எனவே விவசாயிகள் இந்த வாய்ப்பினை பயன் படுத்தி கொண்டு தங்களது நெல்லினை மேற்கண்ட அரசு நேரடி நெல் கொள் முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயனடை யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் கமுதி, பரமக்குடி, திருவாடானை, ராமநாதபுரம் கூட்டுறவு விற்பனை சங்கங்களிலும் மற்றும் தொருவளூர், திருவரங்கம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கங்களிலும் நெல் கொள்முதல் செய்யப்படும் என மாவட்ட கலெக்டர் ஹரிகரன் தெரிவித்துள்ளார்.